ஓம்

திருச்சிற்றம்பலம்

திருவொற்றி

வடிவுடை அம்மை அருள்வேட்டல்

சித்தாந்தப் பிரகாச சபைத் தலைவர்

பேராசிரியர்

பாரிப்பாக்கம் **கண்ணப்ப முதலியார்** அவர்கள்

பாடியது

இராமலிங்க சுவாமிகள் சமாஜத் தலைவர்

வில்சன் கம்பெனி

துவிபாஷி கா. மாணிக்க முதலியார் அவர்களால்

வெளியிடப்பட்டது

உரிமை ஆக்கியோர்க்கே

1950

துவிபாஷி கா. மாணிக்க முதலியார் அவர்கள்

ஓம்

திருச்சிற்றம்பலம்

முன்னுரை

இறைவனுக்கு உருவம், அருவுருவம், அருவம் என்னும் மூன்று நிலைகளும், அவைகட்கு அப்பாற்பட்ட - இன்ன தன்மையன் என்றறிய இயலா - நிலையும் உண்டு. ஒரு நாமம் ஓருருவம் ஒன்று மிலா இறைவன், அன்பர்களுக்கு அருள் புரிதல் காரணமாக, பல திருவுருவங்களும், பல திருப்பெயர்களும் உடையவனாகத் தோற்றம் அளிக்கின்றான். இங்ஙனம் தோற்றமளிக்கும் அவன் திருவுருவங்கள் எல்லாம் அவனது அருள் திருமேனிகளே அன்றி மாயா காரிய உருவங்கள் அல்ல.

அருவமோ உருவா ரூப மானதோ அன்றி நின்ற
உருவமோ உரைக்குங் கர்த்தா வடிவெனக் குணர்த்திங் கெனின்
அருவமும் உருவா ரூப மானதும் அன்றி நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக் குள்ள வாமே.

உருவருள் குணங்க ளோடும் உணர்வருள் உருவில் தோன்றும்
கருமமும் அருள்அ ரன்தன் கரசர ணாதி சாங்கம்
தருமருள் உபாங்கம் எல்லாம் தானருள் தனக்கொன் றின்றி
அருளுரு உயிருக் கென்றே ஆக்கினன் அசிந்தன் அன்றே.

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தங்கள், அவ்வுண்மைகளை விளக்கி நிற்கின்றன. அவ்வருள் திருவுருவங்களைக் கட்புலன் இனிக்கக் கண்டு மகிழவும், அவனது அருட்பெருங் குணங்களை மன அமைதியுடன் இன்புற எண்ணிக் களிக்கவும் எண்ணி இனித்து

மகிழ்ந்த அவனது அருட்பெருஞ் சிறப்புக்களைச் சொல்லினிக்க வாழ்த்தி மகிழவும், அங்ஙனம் கட்புலனினிக்கக் கண்டு மகிழ்ந்தும், மனப்புலன் அமைதியுற நினைந்து மகிழ்ந்தும், வாய்ப்புலன் இனிக்க வாழ்த்தி மகிழ்ந்தும், பன்னாட்கள் பயின்ற அனுபவத்தால் புலனழுக் கற்றுப் புனிதமுற்ற நிலையில், அவன்மயமாகி அவனது அருட்பெரு நிலையைத் தலைக்கூடுதற்கு இயைந்தவாற்றான், அவனது அருட்பெரு மற்புதநிலை அனுபவத்தத்துவ உண்மைகள் எல்லாம் அமைத்தே திருக்கோயில்கள் ஆன்றோர்களால் எடுக்கப்பட்டன. மேற்கூறிய வழிபாட்டுக் கலைகளும் அமைக்கப்பட்டன.

அவ்வருள் திருவுருவங்களும் அவைகள் அமைந்திலங்கும் அற்புதத் திருக்கோயில்களும், காணவும் கருதவும் இயலாத முழு முதற் பரம்பொருளைக் காணவும் கருதவும் இயலுமுறை காட்டித் துணை புரியும் கருவூலங்களாம் கலைச்செல்வங்களாக அமைந்து துலங்குகின்றன.

அவ் வழிபாடுகள் பலவற்றுள்ளும் பாட்டால் வழிபடுதல் சிறந்ததொன்றாக இலங்குகின்றது. நம் தமிழ்மொழிக்கண் கோடிக் கணக்கில் தோத்திரப் பாடல்கள் தோன்றி நிலவுவதொன்றே இதற்குப் போதிய சான்றாம்.

'வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர் இனத்தகத்தான்' 'பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பன்னாள் பாமாலை பாடப் பயில்வித்தானை' 'பன்னிய நூல் தமிழ்மாலைப் பாடுவித் தென் சிந்தைமயக் கறுத்ததிரு அருளினானை' (திருநாவுக்கரசர்) 'அருச்சனை பாட்டே யாகும்' (சேக்கிழார்) என்பன போலும் திருவாக்குக்கள் பாட்டு வழிபாட்டின் சிறப்பினைப் பாராட்டுதல் காணலாம்.

இங்ஙனம் பாடிப் போற்றுமுறை பல்லாயிர ஆண்டுகட்கு முற்பட்ட பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின்கண் ஓதப்பட்டுத் தேவபாடாண்திணை எனச் சிறப்புற்றிருக்கின்றது. ஆசிரியர் தொல்காப்பியனார்,

'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே'

என்பது முதலாக எடுத்துரைக்கும் நூற்பாக்களால் உணர்த்தப்படும் பாடாண்திணைப் பகுதிக்கண் இது சேர்ந்தொளிர்கின்றது.

பாடாண்திணை என்பது பாடப்படுவோரது, ஒளி, ஆற்றல், ஈகை, அளி என்னு மிவற்றை ஆராய்ந்து சொல்லுவதாம். இதனை

'ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்
அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று'

எனப் புறப்பொருள் வெண்பாமாலை விளக்கலால் அறியலாம்.

அம்முறையில் யான் என் இடக்கை எடுக்க இயலாது நோய் வாய்ப்பட்டிருந்த ஞான்று, அந்நோய் நீக்கி அருளுமாறு யான் அடிக்கடி சென்று வழிபாடாற்றி வரும் திருவொற்றியூர் என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டெழுந் தருளியுள்ள வடிவுடை அம்மையின் அருள்வேட்டுப் பாடிய இப்பாடல்களுக்கு திருவொற்றி வடிவுடை அம்மை அருள்வேட்டல் என்னும் பெயர் சூட்டப்பட்டது. எண்ணிறந்த உலகங்கள் எல்லாவற்றினையும், காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும், தத்துவாதீத முழுமுதற் செழும்பொருளாம் இறைவன் திருவருளே, உலகுயிர்களை அளிக்கும் தன்மையால் 'அம்மை' என வைத்து ஓதப்படுகின்றதாகலின், அத்திருவருளுருவாகிய அம்மையின் அளப்பரும் புகழ்ப்பெருக்கினை நினைந்து புனைந்த சொன்மாலையாம் இதனை என் கெழுதகை நண்பரும். பேராசிரியர், கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் இளவலுமாகிய திருவாளர் வில்சன் கம்பெனி துவிபாஷி, கா. மாணிக்க முதலியார் அவர்கள் கைம்மாறு கருதாது தம் பொருட்செலவில் வெளியிட்டருளிய பெருந்தகைமைக்கு யான் அவர்பால் என்றும் குன்றா நன்றி பாராட்டும் கடப்பாடுடையேன். இந்நூலகத்து அவர்தம் உருவப் படத்தினைச் சேர்க்க அவ்வுருவப்படத்தின் அச்சினை (Block) மனமுவந்துதவிய சென்னை மாணவர் மன்றத் தேர்தல் குழுத் தலைவரும், என் கெழுதகை நண்பருமாகிய புலவர், மயிலை, சிவமுத்துக்குமாரசுவாமி முதலியார் அவர்கட்கும், இந்நூற்கு நன்மொழி கூறி என்னைச் சிறப்பித்த என் கெழுதகை நண்பர்,

அ

தமிழ்ப் பெரியார், திரு. வி. கலியாணசுந்தரனுர் அவர்கட்கும், இந்நூலினை அழகுற அச்சிட்டுத் தந்த சாது அச்சுக்கூடத்தினர் கட்கும் எனது மனமார்ந்த நன்றி என்றும் உரியதாம்.

'அறிவெனப் படுவது பேதையார் சொன்னேனன்றல்'

மெய்கண்டவளாகம்,
65, முல்லாசாயபு தெரு
சென்னை-1
15—11—1950

பாரிப்பாக்கம்
கண்ணப்ப முதலியார்

திரு. வி. க. நன்மொழி

பாரிப் பாக்கம் எழுசைவப்
பரிதி பசுமைத் தமிழ்த்திங்கள்
வேரி அருவிக் கலைச்சோலை
வேதத் தென்றல் குணக்குன்று
மாரி என்னக் கண்ணப்ப
வள்ளல் பொழிந்த மலர்மணிகள்
வாரி ஒற்றித் தாயணிந்தாள்
வாழ்த்திக் காண்க மாநிலமே.

உ

திருச்சிற்றம்பலம்

திருவொற்றி

வடிவுடை அம்மை அருள்வேட்டல்

திருவார் பொழில்சூழ் திருவொற்றித்
    தியாகப் பெருமான் திருவருளே!
மருவார் குழலார் மடமயிலே!
    மகிழ்பே ரின்பம் பொழிமுகிலே!
தருவார் தெய்வத் தடம்பொழிலே!
    தமிழாம் அமுதப் பெருங்கடலே!
உருவார் அழகின் மலர்க்கொடியே!
    ஒளியார் வடிவாம் பிகைமணியே!

தண்ணார் மதிசேர் செஞ்சடையின்
    தியாகப் பெருமான் திருவொற்றிப்
பண்ணார் ஞானப் பசுங்குதலைப்
    பகரும் நிகரில் பசுங்கிளியே!
எண்ணா அழகின் வடிவுடையாய்!
    இமவான் அளித்த பொற்கொடியே!
கண்ணார் எழிலின் மான்கன்றே!
    கருணை அமுத மாகடலே!

தெங்கு சிறந்த திருவொற்றித்
தியாகப் பெருமான் திருவுளமே!
மங்கைக் கரசாம் மாமணியே!
மலையத் துவசன் பெருமணியே!
எங்கள் வினையைக் கடிந்தொளிரும்
எழிலார் வடிவாம் பிகைஅரசே!
சங்கத் தமிழின் சுவையமுதே!
சகல கலைக்கும் தாயகமே! 3

கொன்றைச் சடையான் திருவொற்றிக்
குலவும் தெய்வ மணிவிளக்கே!
மன்றில் நடனம் புரிகின்ற
மணியின் ஒளியே! மடப்பிடியே!
என்றும் எங்கள் உயிர்க்குயிராய்
இலங்கும் எழில்சேர் வடிவுடையாய்!
நன்றே உலகின் ஐந்தொழிலும்
நடாத்தும் எம்மான் நாயகியே! 4

காதம் புதிய மணங்கமழும்
கடப்ப மலரார் ஒற்றியில்வாழ்
நாதர் வடிவிற் பாதியுரு
வாகு நலஞ்சேர் வடிவுடையாய்!
ஏதம் நீக்கி மெய்ஞ்ஞானம்
எளியேற் கருளல் என்றோதான்?
பாதம் தொழுவார் பெறும்பயனும்
பரமா னந்தப் பெருங்கடலே! 5